# தமிழ்நாடு உள்ளாட்சி அமைப்புகள் முறைமன்ற நடுவம்

எண். 100, அண்ணா சாலை, கிண்டி, சென்னை- 600 032.
தொலைபேசி : 044– 22201337
மின்னஞ்சல் முகவரி : ombudsmanlocal@tn.gov.in

**முன்னிலை : மு. மாலிக் பெரோஸ்கான், இ.ஆ.ப., (ஓ)**
தமிழ்நாடு உள்ளாட்சி அமைப்புகள் முறைமன்ற நடுவர்

**ஆணை எண்: 367/மா/2023**
**நாள் : 28.12.2023**

திருவாளர்கள் V. கிருபானந்தன் மற்றும் B. விஜயகுமார்,
சென்னை. – முறையீட்டு மனுதாரர்கள்

மண்டல அலுவலர்,
மண்டலம்-11, பெருநகர சென்னை மாநகராட்சி. – எதிர்மனுதாரர்

பெருநகர சென்னை மாநகராட்சி, திருவல்லிக்கேணி, அயோத்தியா நகர், எண்.20/439 என்ற முகவரியில் வசிக்கும், திரு. V. கிருபானந்தன் மற்றும் தண்டையார்பேட்டை, துர்காதேவி நகர், சால்ட் குறுக்கு தெரு எண்.14/15 என்ற முகவரியில் வசிக்கும் திரு. B. விஜயகுமார் என்பவர்களின் 06.11.2023 நாளிட்ட மனு 14.11.2023 அன்று இம்முறைமன்ற நடுவத்தில் பெறப்பட்டு, 367/மா/2023 என்ற எண்ணிட்ட முறையீட்டு மனுவாகப் பதிவு செய்யப்பட்டது. மனுதாரரின் முறையீட்டு மனு பரிசீலனை செய்யப்பட்டு, கீழ்க்காணும் ஆணை வெளியிடப்படுகிறது.

**ஆணை**

பெருநகர சென்னை மாநகராட்சி, திருவல்லிக்கேணி, அயோத்தியா நகர், எண்.20/439 என்ற முகவரியில் வசிக்கும், திரு. V. கிருபானந்தன் மற்றும் தண்டையார்பேட்டை, துர்காதேவி நகர், சால்ட் குறுக்கு தெரு எண்.14/15 என்ற முகவரியில் வசிக்கும் திரு. B. விஜயகுமார் என்பவர்களின் 06.11.2023 நாளிட்ட மனுவில் :-

"நாங்கள் மேற்கண்ட விலாசத்தில் வசித்துக் கொண்டு சமூகம் சார்ந்த சில நல்ல விசயங்களையும் செய்து வருகிறோம். சென்னை - 600 116, மண்டலம் - 11, வார்டு 147, போரூர், ஆலப்பாக்கம், பெருமாள் கோவில் தெரு, கதவு எண்.90/188 என்ற இடத்தில் திரு. S. முருகன் என்பவர் சென்னை மாநகராட்சியிடம் எந்தவிதமான கட்டிட அனுமதியில்லாமல் தரைதளத்துடன் (G+2) இரண்டு மாடி குடியிருப்பு வகை கட்டிடம் கட்டியது தொடர்பாக நாங்கள் பலமுறை புகார் அளித்தும் இதுவரை சென்னை மாநகராட்சி மண்டலம்-11ன் அதிகாரிகள் உரிய நடவடிக்கைகள் எடுக்கப்படவில்லை.

கடந்த எட்டு மாதத்திற்கு முன்பு நாள்:16.03.2023 அன்று நாங்கள் கொடுத்த புகாருக்கு அறிவிப்பு கொடுக்கப்பட்டது. நடவடிக்கை எடுக்கப்படும் என பதில் அளித்தார்கள். பின்பு விசாரணை செய்து வருகிறோம் என்று பதில் அளித்தார்கள். எனினும் தற்போதுவரை சட்டப்படியான உறுதியான நடவடிக்கைகள் மட்டும் எடுக்கவேயில்லை.

எனவே இத்துடன் நாங்கள் மாநகராட்சி அதிகாரிக்கு அனுப்பிய எனது இணையதள புகார் மனுவின் நகல் (2023-284BAL) இணைத்து அனுப்பியுள்ளோம். ஆகவே எங்களின் இந்த புகார் மனுவை கோப்பில் எடுத்து விசாரணை செய்து மேற்கண்ட அனுமதியற்ற விதிமீறல் கட்டிடம் மீதும் அதன் மீது தற்போது வரை நடவடிக்கை எடுக்காத மாநகராட்சி அலுவலர்கள் மீது தகுந்த நடவடிக்கைகள் எடுக்க வேண்டுமென தங்களை மிகவும் தாழ்மையுடன் கேட்டுக்கொள்கிறோம்.

**2. இம்மனு தொடர்பாக மனுதாரர்களை 13.12.2023 அன்றும் எதிர்மனுதாரரை 19.12.2023 அன்றும் நேரடி விசாரணைக்கு வருமாறு அழைப்பாணைகள் அனுப்பப்பட்டன.**

மனுதாரர்கள் 13.12.2023 அன்றைய நேரடி விசாரணையில் ஆஜராகி கீழ்க்கண்டவாறு தங்களது வாக்குமூலத்தை சமர்ப்பித்துள்ளனர்:

"பெருநகர சென்னை மாநகராட்சி மண்டலம் -11, வார்டு 147 போரூர் ஆலப்பாக்கம், பெருமாள் கோவில் தெரு, கதவு எண்.90/188, என்கின்ற இடத்தில் திரு. எஸ். முருகன் என்பவர் சென்னை மாநகராட்சியில் எவ்வித கட்டட அனுமதியும் பெறாமல் தரைதளத்துடன் இரண்டு மாடி குடியிருப்புக் கட்டடம் கட்டியுள்ளார். அனுமதியின்றி கட்டப்பட்டுள்ள மேற்கண்ட கட்டடத்தின் மீது உரிய நடவடிக்கை எடுக்கவேண்டி புகார் மனு அனுப்பப்பட்டது. எங்களது புகார் மனுவையொட்டி மேற்கண்ட கட்டட உரிமையாளருக்கு 3 தாக்கீதுகள் அதாவது 24.1.2023 நாளிட்ட Stop work notice, 21.2.2023 நாளிட்ட Lock and Seal Notice மற்றும் 21.3.2023 நாளிட்ட De-occupation Notice அளித்துவிட்டு அதன் தொடர் நடவடிக்கைகளை எடுக்காமல் மாநகராட்சி அலுவலர்கள் தாமதம் செய்து வருகின்றனர்.

எனவே மேற்கண்ட தாக்கீதுகளைத் தொடர்ந்து, மேற்கண்ட அனுமதியற்ற விதிமீறல் கட்டடத்தின் மீதான தொடர் நடவடிக்கையை மாநகராட்சி அலுவலர்களால் எடுத்திட ஆவன செய்யுமாறு இம்முறைமன்றத்தை கேட்டுக்கொள்கிறோம்".

**பெருநகர சென்னை மாநகராட்சி மண்டலம் 11 –ன் உதவி செயற்பொறியாளர் மற்றும் இளநிலைப் பொறியாளர் ஆகியோர் 19.12.2023 அன்றைய நேரடி விசாரணையில் ஆஜராகி தங்களது வாக்குமூலத்தை பின்வருமாறு சமர்ப்பித்துள்ளனர்.**

மனுதாரர்கள் தங்களது மனுவில் குறிப்பிட்டுள்ள மண்டலம் 11, வார்டு 147 போரூர், ஆலப்பாக்கம், பெருமாள் கோவில் தெரு, கதவு எண் 90/188 என்கின்ற இடத்தில் திரு. முருகன் என்பவர் கட்டியுள்ள கட்டடம் அனுமதி பெறாமல் கட்ட துவங்கப்பட்டபோது 24.01.2023 அன்று Stop Work Notice வழங்கப்பட்டு, அதன் தொடர்ச்சியாக 21.02.2023 அன்று Lock and Seal Notice வழங்கப்பட்டது. மேலும், 30 நாட்கள் கழித்து 21.03.2023 அன்று De-Occupation Notice வழங்கும் நிலையில் கட்டட உரிமையாளர் பெருநகர சென்னை மாநகராட்சியில் கட்டட அனுமதி விண்ணப்பம் சமர்ப்பித்ததைத் தொடர்ந்து கள ஆய்வு மேற்கொள்ளப்பட்டு 29.03.2023 அன்று கட்டட அனுமதி வழங்கப்பட்டது. தற்போது கட்டட அனுமதியின்படி கட்டடம் கட்டப்படாததால் 28.11.2023 அன்று Stop Work Notice மற்றும் Lock and Seal Notice 16.12.2023 அன்றும் வழங்கப்பட்டது. இதனைத் தொடர்ந்து இன்னும் ஒருமாத காலம் முடிவடைந்த பின்னர் கட்டட உரிமையாளர் கட்டட அனுமதியின்படி கட்டடத்தை மாற்றி அமைக்காதபட்சத்தில் De-Occupation Notice வழங்கப்பட்டு ஆணையர் அவர்களின் அனுமதி பெற்று மேற்கண்ட கட்டடத்திற்கு பூட்டி சீலிட நடவடிக்கை மேற்கொள்ளப்படும் என்பதை இம்முறை மன்றத்தில் தெரிவித்துக் கொள்கிறோம்.

**இந்நேர்வில், மனுதாரர்களின் மனு வாக்குமூலம் மற்றும் எதிர்மனுதாரரின் வாக்குமூலம் ஆகியவை இம்முறைமன்றத்தால் பரிசீலிக்கப்பட்டன. பரிசீலனையில் பின்வரும் விவரங்கள் தெரியவருகின்றன:**

மனுதாரர்கள் பெருநகர சென்னை மாநகராட்சி, மண்டலம் 11, வார்டு 147 போரூர் ஆலப்பாக்கம், பெருமாள் கோவில் தெரு கதவு எண்.90/188 என்ற இடத்தில் திரு. எஸ். முருகன் என்பவர் பெருநகர சென்னை மாநகராட்சியிடம் அனுமதியில்லாமல் தரைதளத்துடன் இரண்டு மாடி குடியிருப்பு கட்டிடம் கட்டியது தொடர்பாக பெருநகர சென்னை மாநகராட்சி மண்டலம் 11ன் அலுவலகத்தில் புகார் மனு கொடுத்தும் இதுவரை எவ்வித நடவடிக்கையும் எடுக்கவில்லையென்றும், எனவே தங்கள் மனு மீது உரிய விசாரணை நடத்தி அனுமதியின்றி கட்டப்பட்ட கட்டிடத்தின் மீது உரிய நடவடிக்கையும், தங்கள் மனு மீது நடவடிக்கை எடுக்காத பெருநகர சென்னை மாநகராட்சி மண்டலம்-11ன் அலுவலர்கள் மீது சட்டப்பூர்வமான நடவடிக்கை எடுக்குமாறு கோரியுள்ளனர்.

மனுதாரர் குறிப்பிட்டுள்ள கட்டப்பட்டுள்ள கட்டிடம் அனுமதி பெறாமல் கட்ட துவங்கப்பட்டபோது 24.01.2023 அன்று Stop Work Notice வழங்கப்பட்டு, அதன் தொடர்ச்சியாக 21.02.2023 அன்று Lock and Seal Notice வழங்கப்பட்டது என்றும், 30 நாட்கள் கழித்து 21.03.2023 அன்று De-Occupation Notice வழங்கப்பட்டது என்றும், இந்நிலையில் கட்டிட உரிமையாளர் பெருநகர சென்னை மாநகராட்சியில் கட்டட அனுமதி விண்ணப்பம் சமர்ப்பித்ததைத் தொடர்ந்து கள ஆய்வு மேற்கொள்ளப்பட்டு 29.03.2023 அன்று கட்டட அனுமதி வழங்கப்பட்டது என்றும், ஆனால் அக்கட்டிடம் அனுமதியின்படி கட்டப்படாததால் 28.11.2023 அன்று Stop work Notice மற்றும் Lock and Seal Notice 16.12.2023 அன்று வழங்கப்பட்டது என்றும், இதனைத் தொடர்ந்து இன்னும் ஒரு மாத காலம் முடிவடைந்த பின்னர் கட்டட உரிமையாளர் கட்டட அனுமதியின்படி கட்டடத்தை மாற்றி அமைக்காத பட்சத்தில் De-Occupation Notice வழங்கப்பட்டு ஆணையர் அவர்களின் அனுமதி பெற்று மேற்கண்ட கட்டடத்திற்கு பூட்டி சீலிட நடவடிக்கை மேற்கொள்ளப்படும் என்று பெருநகர சென்னை மாநகராட்சியின் மண்டலம்-11ன் உதவி செயற்பொறியாளர் மற்றும் இளநிலைப்பொறியாளர் தங்களுடைய வாக்குமூலத்தில் தெரிவித்துள்ளனர்.

மனுதாரர் 16.3.2023 நாளிட்ட புகார் மனு அளிக்கும் முன்பே பெருநகர சென்னை மாநகராட்சி, மண்டலம்-11, வார்டு 147 போரூர் ஆலப்பாக்கம், பெருமாள் கோவில் தெரு கதவு எண்.90/188 என்ற இடத்தில் திரு. எஸ். முருகன் என்பவர் அனுமதி பெறாமல் கட்டடம் கட்ட துவங்கப்பட்டபோது உரிய தாக்கீது 24.01.2023 அன்று வழங்கப்பட்டது பாராட்டுக்குரியது என்றாலும், மேற்கண்ட கட்டிட உரிமையாளர் அனுமதி விண்ணப்பம் சமர்ப்பித்ததைத் தொடர்ந்து 29.3.2023 அன்று கட்டட அனுமதி வழங்கிய நிலையில், அதன்பின் இடைப்பட்ட காலத்தில் அதாவது 8 மாத காலத்தில் பெருநகர சென்னை மாநகராட்சி மண்டலம்-11ன் அலுவலர்கள் கள ஆய்வு மேற்கொள்ளாமல் மனுதாரர் இம்முறைமன்றத்திற்கு 6.11.2023 அன்று புகார் மனு அளித்த பின்பு 28.11.2023 அன்று Stop Work Noticeம் 16.12.2023 அன்று Lock and Seal Noticeம் வழங்கப்பட்டது ஏற்புடையது அல்ல. இது கண்டனத்திற்கு உரியது. சம்பந்தப்பட்ட கள அலுவலர்கள் மீது ஒழுங்கு நடவடிக்கை மேற்கொள்ள மாநகராட்சி ஆணையர் அறிவுறுத்தப்படுகிறார்.

மேலும் பெருநகர சென்னை மாநகராட்சி மண்டலம்-11ன் உதவி செயற்பொறியாளர் மற்றும் இளநிலைப்பொறியாளர் ஆகியோர் தங்கள் வாக்குமூலத்தில் தெரிவித்தவாறு மேற்கண்ட கட்டிடத்தை மறு ஆய்வு செய்து கட்டிட உரிமையாளர் கட்டட அனுமதியின்படி கட்டடத்தை மாற்றி அமைக்காதபட்சத்தில் ஒரு மாத காலத்திற்குள் உரிய சட்டப்பூர்வமான நடவடிக்கை எடுக்குமாறும், எடுக்கப்பட்ட நடவடிக்கை

குறித்து 45 தினங்களுக்குள் அறிக்கையினை அனுப்பிவைக்குமாறு பெருநகர சென்னை மாநகராட்சி ஆணையருக்கு இம்முறைமன்றம் ஆணையிடுகிறது.

2023–ஆம் ஆண்டு டிசம்பர் திங்கள் 28–ஆம் நாள் என்னால் கையொப்பமிடப்பட்டு அலுவலக முத்திரையுடன் இவ்வாணை வெளியிடப்படுகிறது.

//ஒப்பம்//
தமிழ்நாடு உள்ளாட்சி அமைப்புகள் முறைமன்ற நடுவர்.

பெறுநர்

1. திரு. V. கிருபானந்தன்
   எண்.20/439, அயோத்தியா நகர்,
   திருவல்லிக்கேணி, சென்னை – 600 005.
2. திரு. B. விஜயகுமார்,
   14/15, சால்ட் குறுக்கு தெரு, துர்கா தேவி நகர்,
   தண்டையார்பேட்டை, சென்னை – 600 081.
3. அரசு கூடுதல் தலைமைச் செயலாளர் / ஆணையாளர்,
   பெருநகர சென்னை மாநகராட்சி,
   ரிப்பன் மாளிகை, சென்னை – 600 003.
4. மண்டல அலுவலர்,
   மண்டலம் - 11, பெருநகர சென்னை மாநகராட்சி,
   எண்.123/33, ஆற்காடு சாலை, வளசரவாக்கம்,
   சென்னை - 600 087.
5. கண்காணிப்பு பொறியாளர்,
   மழைநீர் வடிகால்துறை, ஒருங்கிணைப்பாளர் (Nodal Officer),
   பெருநகர சென்னை மாநகராட்சி,
   ரிப்பன் மாளிகை, சென்னை – 600 003.

**நகல்:** மாண்புமிகு முறைமன்ற நடுவரின் தனிச்செயலர்
இகோ/உதிரிகள்

//ஆணைப்படி/அனுப்பப்படுகிறது//

செயலாளர்